DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

OS.No : 17/2018 and 361/2019 PW : 1

Name : ராதாகிருஷ்ணன் Age –

S/o : ரத்தினம் Village

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

---

Date: 04.02.2026

**<u>1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1) நான் BA படித்துள்ளேன். நீலகண்டன் மற்றும் மணி ஆகியோர்கள என்னுடைய சகோதரர்கள். தாவா சொத்து என்னுடைய அனுபவித்தில் உள்ளது என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து எனக்கு தான் சொந்தம் என்றும், 2ம் பிரதிவாதி விற்றது செல்லத்தக்கதல்ல என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தற்சமயம் தாவா சொத்து என்னுடைய அனுபவித்தில் தான் உள்ளது. என்னை பயிர் செய்யவிடாமல் தடுத்ததால் நான் சுவாதீனம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். சுமார் 2015 ஆண்டு முதல் என்னை பயிர் செய்யவிடவில்லை. 1988 முதல் 2015 வரை என்னுடைய அனுபவித்தில் தான் தாவா சொத்து இருந்தது என்று நான் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். நான் பயிர் செய்ததற்கும் ஆதாரம் தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் 9 அயிட்ட சொத்துக்கள் காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி இந்த வழக்கில் என்ன பதில் தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியாது. தாவா 1, 2 அயிட்ட சொத்துக்கள் 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்துக்கள் என்றால் சரியல்ல. அயிட்டம் 5, 6 சொத்துக்கள் அந்த ஊரில் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

2) அயிட்ட எண்.6–ல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களின் விபரங்கள் தவறு என்று பிரதிவாதி குறிப்பிட்டுள்ளது சரியல்ல. அயிட்ட 6–ல்

குறிப்பிட்டுள்ள சொத்தின் விபரங்கள் நிருப்பிக்கும் பொறுட்டு நான் கூட் சீட் தாக்கல் செய்துள்ளேன். தாவா அயிட்டம் 1, 2, 6 1ம் பிரதிவாதிக்கு மட்டுமே பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றாலும் அவர் சுயமாக வாங்கிய சொத்துக்கள் என்றால் சரியல்ல. தாவா அயிட்டம் 1, 2, 6 ஆதியில் கூட்டு குடும்ப சொத்துக்கள் ஆகும். அந்த சொத்துக்கள் கூட்டு குடும்ப சொத்துக்களாக இருக்கும் போது கிரையம் வாங்கிய சொத்துக்கள் ஆகும். யாரிடம் கிரையம் வாங்கினார் என்ற விபரம் எனக்கு தெரியாது. அந்த சொத்து கிரையம் வாங்கிய சமயத்தில் என் தந்தை, என் பெரிய அண்ணன் ஆகியோர் இருந்தார்கள். 1ம் பிரதிவாதியின் மீது இருந்து நம்பிக்கையின் காரணமாக தான் அந்த சொத்துக்கள் அவர் பெயரில் கிரையம் வாங்கப்பட்டது. அதே காலகட்டத்தில் என் அண்ணன், மற்றும் என் தந்தை பெயரில் வேறு சொத்துக்களும் வாங்கப்பட்டது என்றால் சரிதான். என் பெரிய அண்ணன் நெல் வியாபாரம் செய்து வந்தார். என் தந்தை விவசாயம் செய்து வந்தார். எங்களுக்கு பூர்வீக சொத்துகளும் இருந்தது. 1ம் பிரதிவாதி ஆசிரியராக பணிபுரிந்து கொண்டிருந்தார். அவர் எந்த ஆண்டிலிருந்து பணிபுரிந்து வந்தார் எனக்கு ஞாபகமில்லை. தாவா அயிட்ட 1, 2, 6 சொத்துக்கள் ஆகியவை கூட்டுகுடும்ப சொத்துக்கள் என்பதற்கு கூர் சீட்டு தவிர வேறு எந்த ஆவணம் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.15 ஆவணம் என் தந்தை மற்றும் என் சகோதரர்களுடன் எழுதப்பட்ட ஆவணம் என்றால் சரிதான்.

3) என் தந்தை பெயரில் உள்ள சொத்துக்கள் சம்மந்தமாக மட்டும் தான் வா.சா.ஆ.15 ஆவணம் எழுதப்பட்டது என்றால் சரிதான். அன்றைய தேதியில் தாவா அயிட்ட 1, 2, 6 ஆகியவற்றின் பத்திரம் 1ம் பிரதிவாதி பெயரில் தான் இருந்தது என்றால் சரிதான். மணி பெயரிலும், 1ம் பிரதிவாதி பெயரிலும் சொத்துக்கள் சம்மந்தமாக வா.சா.ஆ.15 ஆவணத்தல் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.15 அசல் ஆவணம் 4ம் பிரதிவாதியிடம் உள்ளது. 4ம் பிரதிவாதி தற்போது உயிருடன் தான் இருக்கிறார். அசல் ஆவணம் துலைந்துவிட்டது என்று என்னிடம் சொன்னார் ஆனால் அவர் பொய்யாக சொல்கிறார் ஆனால் அவரிடம் இருக்கிறது. அந்த ஆவணத்தை கொடுக்க

சொல்லி கேட்டோம் ஆனால் கொடுத்தாரா என்பது எனக்கு தெரியவில்லை. வா.சா.ஆ.15 ஆவணம் இல்லை என்று 1ம் பிரதிவாதி சொல்வது பொய்யாகும். வா.சா.ஆ.15 ஆவணம் உள்ளது என்பது என்னால் நிரூபிக்க முடியும். வா.சா.ஆ.15 ஆவணத்தில் சாட்சி கையெழுத்து இட்டு தர்மலிங்கம் மற்றும் இளங்கோ தவிர்த்து இதர நபர்கள் உயிருடன் தான் இருகிறார்கள். வா.சா.ஆ.15 ஆவணத்தை எழுதிய ஆவண எழுத்தார் இறந்துவிட்டார். அவ்வாறு உள்ள ஆவணம் நடைமுறையில் இல்லை என்றாலும் அந்த ஆவணம் செயல்படுத்தவில்லை என்று 1ம் பிரதிவாதி சொல்வது தவறு.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM

Digitally signed by S TASNEEM
Date: 2026.02.04 10:17:21 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.